**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**
**S.C. No: 184/2024**
**Dated: 15.06.2026**
**Deposition of Witnesses for PW - 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.அப்துல் அமீது** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tr.Vinothkumar,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**எதிரி ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon’ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1- dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மாத்தூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.08.2024-ம் தேதி கீரனூர் காவல் உதவி ஆய்வாளர் பொறுப்பு உடையாளிப்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் கூத்தபெருமாள் அவர்களுடன் நானும் பாலமுருகன் என்பவருடன் உடையாளிப்பட்டி சரகத்தில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய குட்கா புகையிலை விற்பனை செய்பவர்களை கண்காணிக்க ராவுசாப்பட்டி, மின்னாத்தூர், பாப்புடையான்பட்டி ஆகிய இடங்களில் கண்காணித்தபோது கிடைத்த ரகசிய தகவலின்படி தகவலாளி சொன்னபடி 11.15 மணிக்கு பாப்புடையான்பட்டியிலுள்ள நேசம் மளிகை

கடையை கண்காணித்தபோது அந்த கடையின் அருகே TN 55 BF 8607 TVS XL Heavy என்ற வண்டி கடையில் முன்பாக இருந்தது. அந்த வண்டியை பயன்படுத்தி அங்கு மளிகை கடைக்குள் எதிரி விற்பனைக்கு வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு மூட்டை ஒன்று இருந்தது. அந்த சாக்குமூட்டையை கடையிலிருந்து எடுத்து கடையின் பின்பக்கம் எதிரி மறைத்து வைத்தார். நாங்கள் உடனே அங்கு சென்று விசாரித்தபோது அவர் தனது பெயர் சதாம் உசேன் என்று சொன்னார். பின்பு தனது முகவரியை கூறினார். அவரிடம் உன்னையும் உன் கடையையும் சோதனை செய்ய வேண்டும் என்று உதவி ஆய்வாளர் கூத்தபெருமாள் எதிரியிடம் சொன்னார். அவர் கடையை சோதனை செய்தபோது வெள்ளை நிற சாக்கு பையில் புகையிலை பொருட்கள் கான்ஸ் பாக்கெட் 31x300 கிராம் மற்றும் 8x20 கிராம் மொத்த எடை 9.460 கிலோ கிராம் இருந்தது. பின்பு விமல் பான் மசாலா 6 பண்டல்கள் 6x75 கிராம் விதம் 15 பாக்கெட்கள் ஆக மொத்த எடை 487.5 கிராம் இருந்தது. V1 பான் மசாலா 7x12 கிராம் விதம் குட்கா இருந்தது. அதன் மொத்த எடை 84 கிராம் ஆகும். குட்கா மற்றும் புகையிலை பொருட்களின் மொத்த எடை 10 கிலோ 315 கிலோ கிராம் ஆகும். மேற்படி அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைக்ககூடிய குட்கா மற்றும் புகையிலை பொருட்களை பெட்டி கடையில் விற்பனை செய்வதற்கு உரிய அனுமதி எதுவும் எதிரிக்கு இருக்கவில்லை எனவே எதிரி சதா உசேன் தக்க குற்ற காரணம் கூறி சார்பு ஆய்வாளர் கைது செய்து அவரிடமிருந்து 11.35 மணிக்கு

கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அதில் சாட்சியாக நானும் பாலமுருகனும் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் வழி மேற்சொன்ன தடய சொத்துக்களை சார்பு ஆய்வாளர் எங்கள் முன்பாக எதிரியின் மளிகை கடையில் வைத்து கைப்பற்றினார். அதற்காக **கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 12.30 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொர்த்துக்களுடன் நிலையம் வந்து எதிரி மீது சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவுசெய்ய நான் உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நடந்த சோதனை குறித்து பொது நாட்குறிப்பில் அதனை பதிவு செய்து விட்டு தான் நாங்கள் சோதனைக்கு சென்றோம் என்றால் சரிதான்.நாங்கள் எத்தணை மணிக்கு சோதனை கிளம்பினோம் என்றால் காலை 10.30 மணிக்கு கிளம்பினோம். முதலில் எங்கு சென்றோம் என்றால் சொரியன்பட்டிக்கு சென்றோம். அப்போது எத்தனை மணி என்றால் சுமார் 10.45 மணி இருக்கும். பின்னர் மின்னாத்தூருக்கு சென்றபோது 11.00 மணி இருக்கும். பின்பு பாப்புடையான்பட்டிக்கு செல்லும் போது மணி 11.10 இருக்கும். உடையாளிப்பட்டிலிருந்து பாப்புடையான்பட்டி 14 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். ராவுசாப்பட்டி, சொரியன்பட்டி, மின்னாத்தூர் சென்று குட்கா மற்றும் கான்ஸ் சம்பந்தமாக எதாவது கடையை விசாரித்தோம் என்றால் விசாரித்தோம். ஒவ்வொரு ஊரிலும் முறையே

நிமிடங்கள் விசாரணை செய்தோம். நாங்கள் அனைவரும் தனித்தனி வண்டியில் சென்றோம். ரகசிய தகவல் 10.00 க்கு கிடைத்தது. மேற்படி கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கடை ஆட்கள் நடமாட்டம் இருந்ததா என்றால் இருந்தது. நான் கைப்பற்றப்பட்ட பொருட்கள் சம்பந்தமாக பொது மக்களிடம் கையொப்பம் பெற்றிருந்தேனா என்றால் பொது மக்கள் யாரும் முன்வரவில்லை. பொதுவாக பொது மக்கள் யாரும் கையொப்பமிட வரவில்லை என்றால் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் வரவழைக்கப்படுவாரா என்றால் ஆமாம். இந்த வழக்கில் கிராம நிர்வாக அலுவலரை நானோ அல்லது உதவி ஆய்வாளரோ அழைக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களை எந்த கடையில் எடை போட்டோம் என்றால் அவருடைய கடையிலேயே எடை போட்டோம். மேற்படி கடையில் தான் எடை போட்டோம் என்பதற்கு எந்த கையொப்பமும் பெறவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் கூர்மை நிலையில் இருந்ததா அல்லது திரவ நிலையில் இருந்ததா அல்லது திடமாக இருந்ததா என்ற விவரம் எனக்கு தெரியாது. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களுடன் உடையாளிப்பட்டி காவல் நிலையத்திற்கு 12.30 மணியளவில் வந்தோம். நான் எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றும் முறையாக கைப்பற்றியிருந்தால் கிராம நிர்வாக அலுவலரை அழைத்து இருப்பேன் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் வைத்து

தயார் செய்யப்பட்டது என்றும் அதனால் தான் அதில் பொது மக்கள் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :**

**இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**

**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**S.C. No: 184/2024**

**Dated: 15.06.2026**

**Deposition of Witnesses for PW - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.பாலமுருகன்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tr.Vinothkumar,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**எதிரி ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1- dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடையாளிப்பட்டி காவல் நிலையத்தில் 2-ம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.08.2024-ம் தேதி கீரனூர் காவல் உதவி ஆய்வாளர் பொறுப்பு உடையாளிப்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் கூத்தபெருமாள் அவர்களுடன் நானும் அப்துல் அமீது என்பவருடன் உடையாளிப்பட்டி சரகத்தில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய குட்கா புகையிலை விற்பனை செய்பவர்களை கண்காணிக்க ராவுசாப்பட்டி, மின்னாத்தூர், பாப்புடையான்பட்டி ஆகிய இடங்களில் கண்காணித்தபோது கிடைத்த ரகசிய தகவலின்படி தகவலாளி சொன்னபடி 11.15 மணிக்கு பாப்புடையான்பட்டியிலுள்ள நேசம் மளிகை கடையை கண்காணித்தபோது அந்த கடையின் அருகே TN 55 BF 8607 TVS XL Heavy என்ற வண்டி கடையில் முன்பாக இருந்தது. அந்த வண்டியை பயன்படுத்தி அங்கு மளிகை கடைக்குள் எதிரி விற்பனைக்கு வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு மூட்டை ஒன்று இருந்தது. அந்த சாக்குமூட்டையை கடையிலிருந்து எடுத்து கடையின் பின்பக்கம் எதிரி

மறைத்து வைத்தார். நாங்கள் உடனே அங்கு சென்று விசாரித்தபோது அவர் தனது பெயர் சதாம் உசேன் என்று சொன்னார். பின்பு தனது முகவரியை கூறினார். அவரிடம் உன்னையும் உன் கடையையும் சோதனை செய்ய வேண்டும் என்று உதவி ஆய்வாளர் கூத்தபெருமாள் எதிரியிடம் சொன்னார். அவர் கடையை சோதனை செய்தபோது வெள்ளை நிற சாக்கு பையில் புகையிலை பொருட்கள் கான்ஸ் பாக்கெட் 31x300 கிராம் மற்றும் 8x20 கிராம் மொத்த எடை 9.460 கிலோ கிராம் இருந்தது. பின்பு விமல் பான் மசாலா 6 பண்டல்கள் 6x75 கிராம் விதம் 15 பாக்கெட்கள் ஆக மொத்த எடை 487.5 கிராம் இருந்தது. V1 பான் மசாலா 7x12 கிராம் விதம் குட்கா இருந்தது. அதன் மொத்த எடை 84 கிராம் ஆகும். குட்கா மற்றும் புகையிலை பொருட்களின் மொத்த எடை 10 கிலோ 315 கிலோ கிராம் ஆகும். மேற்படி அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைக்ககூடிய குட்கா மற்றும் புகையிலை பொருட்களை பெட்டி கடையில் விற்பனை செய்வதற்கு உரிய அனுமதி எதுவும் எதிரிக்கு இருக்கவில்லை எனவே எதிரி சதா உசேன் தக்க குற்ற காரணம் கூறி சார்பு ஆய்வாளர் கைது செய்து அவரிடமிருந்து 11.35 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அதில் சாட்சியாக நானும் அப்துல் அமீதும் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் வழி மேற்சொன்ன தடய சொத்துக்களை சார்பு ஆய்வாளர் எங்கள் முன்பாக எதிரியின் மளிகை கடையில் வைத்து கைப்பற்றினார். அதற்காக **கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ.1** ஆக ஏற்கனவே

குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு 12.30 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொ்த்துக்களுடன் நிலையம் வந்து எதிரி மீது சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவுசெய்ய நான் உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நடந்த சோதனை குறித்து பொது நாட்குறிப்பில் அதனை பதிவு செய்து விட்டு தான் நாங்கள் சோதனைக்கு சென்றோம் என்றால் சரிதான்.நாங்கள் எத்தணை மணிக்கு சோதனை கிளம்பினோம் என்றால் காலை 10.30 மணிக்கு கிளம்பினோம். முதலில் எங்கு சென்றோம் என்றால் சொரியன்பட்டிக்கு சென்றோம். அப்போது எத்தனை மணி என்றால் சுமார் 10.45 மணி இருக்கும். பின்னர் மின்னாத்தூருக்கு சென்றபோது 11.00 மணி இருக்கும். பின்பு பாப்புடையான்பட்டிக்கு செல்லும் போது மணி 11.10 இருக்கும். உடையாளிப்பட்டிலிருந்து பாப்புடையான்பட்டி 14 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். ராவுசாப்பட்டி, சொரியன்பட்டி, மின்னாத்தூர் சென்று குட்கா மற்றும் கான்ஸ் சம்பந்தமாக எதாவது கடையை விசாரித்தோம் என்றால் விசாரித்தோம். ஒவ்வொரு ஊரிலும் முறையே 5 நிமிடங்கள் விசாணை செய்தோம். நாங்கள் அனைவரும் தனித்தனி வண்டியில் சென்றோம். ரகசிய தகவல் 10.00 க்கு கிடைத்தது. மேற்படி கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கடை ஆட்கள் நடமாட்டம் இருந்ததா என்றால் இருந்தது. நான் கைப்பற்றப்பட்ட பொருட்கள் சம்பந்தமாக பொது மக்களிடம்

கையொப்பம் பெற்றிருந்தேனா என்றால் பொது மக்கள் யாரும் முன்வரவில்லை. பொதுவாக பொது மக்கள் யாரும் கையொப்பமிட வரவில்லை என்றால் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் வரவழைக்கப்படுவாரா என்றால் ஆமாம். இந்த வழக்கில் கிராம நிர்வாக அலுவலரை நானோ அல்லது உதவி ஆய்வாளரோ அழைக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களை எந்த கடையில் எடை போட்டோம் என்றால் அவருடைய கடையிலேயே எடை போட்டோம். மேற்படி கடையில் தான் எடை போட்டோம் என்பதற்கு எந்த கையொப்பமும் பெறவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் கூர்மை நிலையில் இருந்ததா அல்லது திரவ நிலையில் இருந்ததா அல்லது திடமாக இருந்ததா என்ற விவரம் எனக்கு தெரியாது. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களுடன் உடையாளிப்பட்டி காவல் நிலையத்திற்கு 12.30 மணியளவில் வந்தோம். நான் எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றும் முறையாக கைப்பற்றியிருந்தால் கிராம நிர்வாக அலுவலரை அழைத்து இருப்பேன் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும் அதனால் தான் அதில் பொது மக்கள் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :**

**இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.